செ.வெ.எண். 46

நாள்: 17.08.2017

**திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழக கடனுதவித் திட்ட விண்ணப்பங்கள் பெறும் "லோன் மேளா" நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழக கடனுதவித் திட்ட விண்ணப்பங்கள் பெறும் "லோன் மேளா" நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் இன்று ( 17.08.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

தமிழக அரசு சிறுபான்மையினர் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்திடும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் தனி நபர் கடன் வழங்கும் திட்டம், சுய உதவிக் குழுக்களுக்கான சிறு கடன் திட்டம், கல்விக்கடன், கறவை மாடு வாங்க கடனுதவி, ஆட்டோ கடன் உள்ளிட்ட கடனுதவிகள் வழங்கப்படுகின்றது. திருநெல்வேலி மாவட்டத்தில் ஏற்கனவே "டாம்கோ" கடனுதவி பெற லோன் மேளா நடத்தப்பட்டு ரூ.2.20 கோடி அளவிலான கடனுதவி விண்ணப்பங்கள் பெறப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், விடுபட்டுள்ளவர்களுக்கும், தகவல் தெரியாதவர்களுக்கும் வாய்ப்பு வழங்கும் வகையில் இன்று (17.08.2017) லோன் மேளா நடத்தப்படுகின்றது. கல்விக்கடன் விண்ணப்பங்கள் மிகக் குறைவாக உள்ளது. சிறுபான்மையினர் விழிப்புணர்வுடன் கல்விக்கடன், சுய உதவிக்குழுக்கடன், ஆட்டோ கடன், கறவை மாடு கடன் உள்ளிட்டவைகளுக்கு அதிக அளவில் விண்ணப்பிக்க வேண்டும். இங்கு பெறப்பட்டுள்ள விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, பரிந்துரைக்கப்பட்டு அரசின் அனுமதி பெற்று கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என பேசினார்.

இக்கூட்டத்தில், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம் பகவத், இ.ஆ.ப., மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.சத்திய நாராயணா, கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் திரு.குருமூர்த்தி, ஆவின் பொது மேலாளர் திரு.ராமநாதன் மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி